JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }
Miscellaneous } Case No : - CC 83/2017
: Prosecution P.W - 4

NAME : **கண்ணன்**

FATHER'S NAME :
VILLAGE :
TALUK :
CASTE :
CALLING :
RELIGION :
AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 10.07.2025.

**முதல் விசாரணை**

**நான் தற்போது மேல கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். சாட்சி சிபி என்பவரை தெரியும். என்னுடைய பெரியப்பா மகன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தை சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பு கடையநல்லூர் காவல்நிலையத்தில் வைத்து எங்கள் ஊர் கோவில் திருவிழாவிற்கு அனுமதி வாங்க சென்றபோது போலீசார் என்னிடம் கேட்டார்கள். நான் போட்டுக் கொடுத்தேன். இவ்வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.**

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>**

**போலீசார் விசாரணையில் கடந்த 21.01.2016 ம் தேதி காலை 9.30 மணிக்கு நானும், சாட்சி சிபி என்பவரும் வழக்கின் சம்பவயிடத்தில் நின்று கொண்டிருந்தபோது அப்போது அங்கு வந்த கடைநயல்லூர் காவல்**

நிலைய காவல் ஆய்வாளர் கடையநல்லூர் காவல் நிலைய குற்ற எண்.35/2016 வழக்கின் சம்பவயிடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் எங்கள் முன்பு பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC 83/2017 |
| | : | Prosecution P.W - 3 |
| NAME | : | பாண்டி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 10.07.2025.

முதல் விசாரணை

நான் தற்போது கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன சுப்பம்மாளை எனக்கு தெரியாது. எதிரி சப்பாணியை தெரியாது. அ.சா.1 காளியப்பன், அ.சா.2 மாரியப்பன் ஆகியோர்களை தெரியாது. வழக்குபற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலீசார் விசாரணையில் கடந்த 20.01.2016 ம் தேதி காலை 6.30 மணிக்கு கொல்லம் – திருமங்கலம் தேசிய நெடுஞ்சாலையில் கடையநல்லூர் அட்ட குளத்திற்கு தென்புறம் உள்ள தனலெட்சுமி ரைஸ்மில் பக்கம் நான் ரோட்டை கடப்பதற்காக நின்றுகொண்டிருந்தபோது அதே ரோட்டில் வடக்கிலிருந்து தெற்காக டிஎன் 11 இசட் 4788 என்ற பதிவெண் கொண்ட லோடு வண்டியை எதிரி சப்பாணி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டிவந்து சுப்பம்மாள் மீது மோதி விபத்தை

ஏற்படுத்தினார் என்றும், அதில் சுப்பம்மாளுக்கு தலையின் பின்னால் இரத்த காயமும், வலது கால் முட்டி, வலது மணிக்கட்டில் காயம் எற்பட்டது என்றும், பின்னர் சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும்,. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi